உடனடி வெளியீட்டுக்காக

Media Release

**ஒன்ட்டேரியோ பிரதேசத்தில் இளைஞர்களுடன் தோழமை பாராட்டுவதில் மிகவும் முன்னணியில் இருக்கின்ற நகரங்களில் ஒன்றாக ப்ராம்ப்ட்டன் திகழ்கிறது**

ப்ராம்ப்ட்டன் , ON (மே 7, 2020) – ஒன்ட்டேரியோவின் பூங்காக்கள் மற்றும் புத்தாக்கம் பெறுதல் (Parks and Recreation Ontario) அமைப்பினால் ஆதரவளிக்கப்படுகின்ற ஒரு நிகழ்ச்சித் திட்டமாகிய ப்ளே வொர்க்ஸ் (Play Works) லிருந்து ப்ராம்ப்ட்டன் நகரம் மீண்டும் ஒரு முறை பெயர் வாங்கியிருக்கிறது; இது "இளைஞர்களுடன் தோழமையாகியிருக்கின்ற பிளாட்டினம் சமுதாயம்" என்ற தகுதி பெற்றிருக்கிறது.

இளைஞர்களுக்கான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான வாய்ப்புக்களைக் கொடுப்பதில் தனித்துவமான கடமையுணர்வு கொண்டமைக்காக, இந்தநகரம் இப்போது மூன்றாவது முறையாக அங்கீகாரம் பெற்றிருக்கிறது; மிக உயரிய பிளாட்டினம் தகுதியைப் பெற்ற மூன்று சமூகங்களில் ஒன்றாகவும் இருக்கிறது.

இளைஞர்களுடன் தோழமையாகியிருக்கின்ற பிளாட்டினம் சமுதாயம் என்னும் தகுதியானது ஒன்ட்டேரியோ பிரதேசத்தில் இருக்கின்ற 13 முதல் 19 வயதுக்குள் இருக்கின்ற இளைஞர்களின் தேவைகளை அங்கீகரிக்கின்ற சமுதாயங்களுக்கென மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்ற பாராட்டு ஆகும்; இதனைப் பெறுவற்கு பல்வேறு கலைகள், பொழுதுபோக்கு மற்றும் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பு ஆகியவற்றில்  இளைஞர்களுக்கு தலைமைப் பண்பு மற்றும் ஈடுபாடு கொள்வதற்கான சந்தர்ப்பங்களை நகர நிர்வாகம் தொடர்ந்து அளிப்பதை உறுதி செய்வது அவசியம். இதனை அடைவதற்கு இந்த சமுதாயங்கள் இளைஞர்களுக்கு தோழமையாக இருக்க வேண்டிய காரணிகளில் குறைந்தது ஏழு காரணிகளை நிறைவு செய்திருக்க வேண்டும். மொத்தம் இருக்கின்ற பத்து காரணிகளையும் நிறைவேற்றுகின்ற நகருக்கு பிளாட்டினம் தகுதி வழங்கப்படுகிறது. தற்போது, ஒன் ட்டேரியோவில் 47 சமுதாயத்தினர் இப்படியாக இளைஞர்களுக்கு தோழமையாக இருந்து வருவதாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனர்.

ப்ராம்ப்ட்டன் நகரில் 13 முதல் 19 வயதுக்குள்ளாக 58,800 இளைஞர்கள் இருக்கின்றனர்; இதில் 43,111 பேர் அவரவருக்கு பொருத்தமாக,  நகரம் வழங்குகின்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்; இதில் மே மாதத்தில் நடைபெறுகின்ற தேசிய இளைஞர் வார நிகழ்வுகளும் அடங்கும்.

இந்த ஆண்டிற்கான தகுதி அடைதலுக்கு, ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கின்ற பல்வேறு இளைஞர் அமைப்புக்களும் சேவை அளிப்பாளர்களும் தங்கள் பங்கினை ஆற்றியிருக்கின்றனர். முழு பட்டியலைப் பார்க்க இங்கு க்ளிக் செய்யவும்.

ப்ளே வொர்க்ஸ் (Play Works) என்பது, பல அமைப்புக்கள் கொண்ட ஒரு குழுவாகும்; இது எதிர்கால இளைஞர்களை மனதில் வைத்து, ஒன்ட்டேரியோ பிரதேசத்தில் இருக்கின்ற சமுதாயத்தின் மீது இளைஞர்கள் ஈடுபாடு காட்டுவதை மேம்படுத்த அவர்களின் ஆற்றலை ஒன்று சேர்க்கிறது. ப்லே வொர்க்ஸ் (Play Works) உடன் பங்கு வகிப்பவர்கள்: 4- எச் ஒன் ட்டேரியோ (4-H Ontario); குழந்தைகள் மற்றும் இளஞர்களுக்கான கலைகளின் நெட்வொர்க் (Arts Network for Children and Youth); கனடா நாட்டு –மத்தியப்பகுதி சிறுவர் சிறுமியர்களுக்கான கிளப்புகள் (Boys and Girls Clubs of Canada – Central Region); ஓஃபியா (Ophea); ஒன்ட்டேரியோ பிரதேச பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு (Parks and Recreation Ontario); ஒய் எம் சி ஏ ஒன்ட்டேரியோ (YMCA Ontario).

**அறிஞர் கூற்றுக்கள்**

"இது தேசிய இளைஞர் வாரம் ஆகும்; சந்தர்ப்பங்களுக்கு காத்திருக்கும் ஒரு நகரமாக இருந்தபடி, நமது இளைஞர்கள் எதையும் கற்கவும், வளர்ச்சியடையவும் மற்றும் விளையாடுவதற்கான அளவிட முடியாத வசதியை ஏற்படுத்தவும் நாம் கடைமை கொண்டிருக்கிறோம். ஒன்ட்டேரியோவில் இளைஞர்களுக்குத் தோழமையான சமுதாயம் எனும் இந்தத் தகுதியை மீண்டும் ஒருமுறை அடைவதில் நாம் பெருமை கொள்கிறோம்; இதனை அடைவதில் முக்கிய பங்காற்றிய தலைசிறந்த சமுதாய கூட்டாளிகளுக்கு எனது நன்றியைத் தெரிவிக்க நான் ஆசைப்படுகிறேன். இந்த கடினமான கால கட்டத்திலும், நிகழ்நிலை போன்ற செயல்பாடுகள் பலவற்றையும் ஆன்லைனில் கண்டு செயல்பாட்டுடன் இருக்க, ப்ராம்ப்ட்டன் நகரின் சமூக ஊடகங்கள் மற்றும் வலைத்தளமாகிய brampton.ca ஆகியவற்றைப் பின்பற்றுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்."

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

" சமீபத்தில், ப்ராம்ப்ட்டன் நகரம் தனது முதன்முதலான இளைஞர்களுக்கான, இளைஞர்களால் செய்யப்படுகின்ற, இளைஞர் ஈடுபாட்டு யுக்தியை அறிமுகப்படுத்தியது, - இதன் வகையில், ஒன்ட்டேரியோவில் இது முதலாவதாகும். இளைஞர்களுக்கு ஆற்றலளிக்க ப்ராம்ப்ட்டனில், நகர ஊழியர்கள் தங்களை அர்ப்பணித்துள்ளனர், மேலும் திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புக்களை

உருவாக்கும் போது இளைஞர்களின் கண்ணோட்டம் வழியாகவே நாங்கள் விஷயங்களை தொடர்ந்து எடுத்துக்கொள்கிறோம். இளைஞர்களுடன் ஈடுபடுவதில் நாங்கள் மேற்கொண்டுள்ள பணிகளுக்காக இனிவரும் ஆண்டுகளில் இந்த கவுரவம் தொடர்ந்து கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்."

- *டேவிட் பேர்ரிக், டலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

" இந்த நகரங்களும் மாநகரங்களும் இளைஞர்களின் ஈடுபாட்டைக் கொண்டு வருவதற்காக, சமூகத்தினரை முழுவதுமாக அணுகுவது என்ற முடிவை எடுத்துள்ளன. இளைஞர்களை, அவர்கள் இருக்கும் இடத்திலேயே சந்தித்து, அவர்களின் குரலும் ஓங்கி ஒலிக்கச் செய்யவும், முடிவெடுப்பதில் சுறுசுறுப்பான பங்கையும் அளிக்கவும் குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். தலைமைப் பொறுப்புக்களை வகிக்கவும், தங்களின் பள்ளிகள், சுற்றுப்புறங்கள் மற்றும் சமூகங்களின் ஒட்டுமொத்த ஆரோக்கியம் மற்றும் சுறுசுறுப்புக்கு பங்களிக்கவும் இளைஞர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதால் நாங்கள் சிறந்த முடிவுகளைக் காண்கிறோம்."

- *கேத்தி டென்யெர், தலைமை செயல்பாட்டு அதிகாரி, பார்க்ஸ அண்ட் ரிக்ரியேஷன், ஒன் ட்டேரியோ*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca